9th August 1966]

எல்லாம் கிண்டியிலும் சரி, போரென்ஸிக் லபோராடரியிலும் சரி அனலிஸிஸ் பண்ணி வந்திருக்கிறது. இதுவரையில் பாய்ஸனிங் ஒன்றுமில்லை என்று ரிபோர்ட்டு வந்திருக்கிறது. நானும் மறுநாள் போய் பார்த்தேன். பையன்கள் நல்ல ஹெல்தியாகத் தான் இருந்தார்கள்.

* 277 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to undertake a study of infections of Selmonella (food poisoning group organisms) in the State; and

(*b*) if so, the details thereof and the nature of work to be carried on thereat?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன்: ஃபுட் பாய்ஸனிங் என்பது குறிப்பாக மாணவர்களுடைய விடுதிகளில் ஏற்படுவதன் காரணமாக இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து ஆராய்ச்சி செய்வதற்கு அரசாங்கம் ஒரு ஏற்பாடு செய்யுமா?

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் அவர்கள் முன்பு கேட்ட மூலக் கேள்வியையே திருப்பிச் சொல்லுகிறார்கள். முன்பு ஆங்கிலத்தில் போட்ட கேள்வியைத் தமிழில் கேட்கிறார்கள்.

Paucity of X-ray Films

* 278 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the delay and the consequent suffering and hardship caused to patients in need of neuro-surgical and thoracic-surgical treatment due to paucity of X-Ray Films in Hospitals in the State; and

(*b*) if so, the measures the Government have proposed to take for assuring adequate supply of the same?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இம் மாநிலத்தில் உள்ள அரசாங்க மருத்துவ மனைகளில், 1965 நவம்பர் முதல் 1966 ஜனவரி வரை X-கதிர் பிலிம்களுக்குத் தட்டுப்பாடு இருந்த போதிலும், மூளை அறுவைச் சிகிச்சை, அல்லது மார்புப் பகுதி அறுவைச் சிகிச்சை தேவைப்பட்ட நோயாளிகளுக்கு அதனால் இடர்ப்பாடு ஏற்பட்டதாக அரசாங்கத்தின் கவனத்திற்குத் தகவல் எதுவும் கொண்டுவரப்படவில்லை.

(இ) X-கதிர் பிலிம்களுக்குள்ள தட்டுப்பாட்டினைப் போக்குவதற்காக, இந்திய அரசைச் சேர்ந்த சுகாதார அமைச்சகத்திற்கும், இந்திய மருந்துப் பொருள்கள் கட்டுப்பாடு அதிகாரிக்கும் எழுதப்பட்டுள்ளது. பிலிம்கள் வழங்கும் நிறுவனங்களின் பிரதி

நிதிகளும், மருத்துவ மனை அதிகாரிகளுடன் ஒத்துழைத்து, தங்குதடையின்றி பிலிம்களைத் தொடர்ந்து வழங்கிவருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகளினால் நிலைமை மிகவும் சீரடைந்துள்ளது. மருத்துவ மனைகளுக்கும் போதுமான X கதிர் பிலிம்கள் தற்போது கிடைத்து வருகின்றன.

Army Medical Corps

* 279 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have proposed to introduce new concessions by way of incentives to doctors offering to join the Army Medical Corps ; and

(*b*) if so, the details thereof?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) : The Government granted the following concessions to induce doctors to join the Army Medical Corps :—

(i) A family allowance of Rs. 250 per mensem to the doctors of the Madras Medical Service whether temporary or regular who joined the Army.

(ii) Reservation of 50 per cent of vacancies in the cadre of Assistant Surgeons for doctors who rendered military duty in connection with the emergency which arose in 1962 and 1965.

திரு. வை. சங்கரன் : இந்த பாமிலி அலவன்ஸ் ரூ. 250 போன ஆண்டு செப்டம்பரிலிருந்து இதுவரைக்கும் கொடுக்கப்படவில்லை, அவர்களுக்குச் சேரவில்லை என்ற புகார் வந்திருக்கிறதா? அதை சர்க்கார் பரிசீலித்து வேண்டிய நடவடிக்கை எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரியான தகவல் கிடைக்கும்பொழுது அவ்வப்பொழுது கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

Medical Colleges

*280 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of posts in the cadre of Reader and Assistant Reader sanctioned in the Department of Pharmaceutics in Madurai Medical College ; and

(*b*) the reason for the delay, if any, in appointing candidates to those sanctioned posts?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) Three posts of Readers and seven posts of Assistant Readers.

(*b*) Appointments to these posts could not be made as qualifications, method of recruitment, etc., had to be settled first.